ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1865/37 - 2014 ජුනි මස 06 වැනි සිකුරාදා - 2014.06.06

*1865/37 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 11/2009* (II)

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

27 அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதும், 1981 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறானதுமான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 27அ (4) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் -

(அ) லெல்வல வத்த என அழைக்கப்படுவதும் அறியப்படுவதும், இக்கட்டளைக்கான முதலாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும், 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுமான காணி தொடர்பாக 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27 அ (1) என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 181/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை, அத்தகைய கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்டமைக்கான பிரதிபயன் தொடர்பான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாமை என்ற ஏதுக்களின் மீது இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட லெல்வல வத்த என்று அழைக்கப்படும் காணிப்பரப்புடன் தொடர்புபட்டவாறான சொல்லப்பட்ட கட்டளையின் அத்தகைய பாகத்தை இல்லாதொழிப்பதன் மூலம் இத்தால் திருத்துகின்றேன்; அத்துடன்

(ஆ) இல்லாதொழிப்பின் மேல், அத்தகைய காணிப் பரப்பானது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு மீள உரித்தாக்கப்படுமென்று இத்தால் தெரிவிக்கின்றேன்.

**முதலாம் அட்டவணை**

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்ட லெல்வல வத்த என அறியப்படும் காணியின் விவரணம்

| அதி விசேட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் | காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குக் கைமாற்றப்பட்ட காணிகளின் பரப்பளவு |
|---|---|---|---|---|
| 181/12 ஆம் இலக்கமும் 1982.02.27 ஆம் திகதியும் | லெல்வல வத்த | காலி | பத்தேகம | 451.14 ஹெக்டயார்கள் |

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## இரண்டாம் அட்டவணை

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு மீள உரித்தாக்கப்பட்ட காணிப்பரப்பின்
பாகத்தின் விவரணம்

| குறிப்பிட்ட இல. | காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு மீள உரித்தாக்கப்பட்ட காணிப்பரப்பின் பாகத்தின் பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| Co / 1074<br>Co / 1091<br>Co / 1087<br>Co / 1071<br>Co / 1225<br>Ke / 52 | லெல்வல வத்த | காலி | பத்தேகம | இல. 191/C தெய்யந்தர | காலி மாவட்ட நீதிமன்றத்தில் T/9710 ஆம் இலக்க இறுதி விருப்பாவண வழக்கிற்காக உரிமமளிக்கப்பட்ட நில அளவையாளரும் நீதிமன்றஆணையாளருமான ஜீ. ஈ. பலிஹபிட்டிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.07.15 ஆந் திகதிய 746 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A மற்றும் B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டுகளைக் கொண்டுள்ளதும், பரப்பளவில் 03ஏ. 00று. 00பே. (1.21405 ஹெக்டயார்கள்) என்பதைக் கொண்டதுமான காணிப் பாகம் |

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01,
2014, மே 30.

6- 613